# இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம்: பனகல், நடேசன் பூங்காக்களுக்கு சேதமில்லை

நமது நிருபர்

சென்னை,மே 9: இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தின், கட்டுமானத்தில் தியாகராய நகரில் பனகல் பூங்கா, நடேசன் பூங்காவின் ஒரு பகுதி ஆகியவற்றைப் பயன்படுத்த அங்குள்ள குடியிருப்புவாசிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து, பூங்காக்கள் எந்தவிதத்திலும் சேதப்படுத்தப்படாது என்று மெட்ரோ ரயில் நிறுவனம் உறுதியளித்துள்ளது.

சென்னையில் முதல்கட்ட மெட்ரோ ரயில் திட்டம் முடிந்து இரண்டு வழித்தடங்களில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. இதைத் தொடர்ந்து, வண்ணாரப்பேட்டை முதல் விம்கோ நகர் வரையிலான விரிவாக்கம் பணிகள் வேகமாக நடந்து வருகின்றன.

இதற்கிடையில், சென்னை மெட்ரோ ரயில் இரண்டாவது திட்டம் மூன்று வழித்தடங்களில் 118.9 கி.மீ.க்கு ரயில் பாதை அமைக்கப்படவுள்ளது. மாதவரம்-சிறுச்சேரி சிப்காட் (45.9 கி.மீ.) உள்பட 3 வழித்தடத்தில் அமைக்கப்படவுள்ளன.

இந்தத்திட்டத்தில்ஒருபகுதியாக தியாகராய நகரில் பனகல் பூங்கா, நடேசன் பூங்காக்கள் மெட்ரோ ரயில் கட்டுமானப் பணிக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அன்மையில் வெளியிடப்பட்ட இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்ட விரிவான அறிக்கையில், கட்டுமானப் பணியை செயல்படுத்தும்போது, இரண்டு பூங்காக்களும் பாதிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது. இதுதொடர்பாக, 2016, 2017, 2018 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற கள ஆய்வில், வழித்தடம் 4-இல் இரண்டு பூங்காக்கள் வருகின்றன. குடியிருப்புகள் , பூங்காக்கள், கட்டடங்கள், வணிக வளாகங்கள் என்று 474 வடிவமைப்புகள் பாதிக்கப்படும். இதில் பூங்காக்கள் மற்றும் 37 மற்ற வடிவமைப்புகள் (காவல் நிலையங்கள், பள்ளிகள், மருத்துவ மனைகள், பேருந்து நிறுத்தங்கள், கோயில்கள்) ஆகியவை அடங்கும்.

**3,000 மக்கள் கையெழுத்து:** இதற்கிடையில், பனகல் பூங்காவை பாதுகாக்கவேண்டும்என்றுஇணையதள மனுவில் 3,000 பேர் கையெழுத்திட்டிருந்தனர். அந்த மனுவில், முதல் கட்ட மெட்ரோ திட்டத்தில் 3 பூங்காக்கள் அழிக்கப்பட்டன. அதாவது, நேரு பூங்கா, திரு.வி.க. பூங்கா, சேத்துப்பட்டு பூங்கா முழுமையாக பாதிக்கப்பட்டது. இதேபோல,மற்ற இரண்டு அழகான (பனகல், நடேசன் பூங்கா) பூங்காக்களுக்கு அதே நிலைமை ஏற்படக் கூடாது என்று தெரிவித்திருந்தனர்.

இது குறித்து குடியிருப்புவாசிகள் சிலர் கூறியது: பனகல் பூங்கா எட்டு ஏக்கரில் பரந்து விரிந்து அமைந்துள்ளது. இங்கு 280 மரங்கள் உள்ளன. இதில், வில்வம், நாவல், நாகலிங்கம், இலவு உள்பட 80 நாட்டு மரங்கள் அடங்கும். மேம்பாட்டுக்காக 87 ஆண்டுகள் பாரம்பரிய பூங்காவை அழிக்கக்கூடாது. இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றனர்.

**சேதப்படுத்தப்படாது:** இது குறித்து மெட்ரோ ரயில்வே அதிகாரி ஒருவர் கூறியது: பூங்காக்களின் சேதத்தை குறைக்கும் வகையில், வடிவமைப்பில் சில மாற்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மெட்ரோ ரயில்நிலையத்தின் அளவை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மெட்ரோ ரயில் நிலையத்தின் அளவைப் பொருத்தவரை முன்பு 220 மீட்டர் நீளமும், 26 மீட்டர் அகலமும் இருந்தது. இப்போது, 150 மீட்டர் நீளமும், 19 மீட்டர் அகலமுமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இரண்டு நிலையங்களும் பூங்காக்கள் அருகில் வருகின்றன. பூங்காவை சுற்றிய சிறிய இடம் பயன்படுத்தப்படும். எந்தவிதத்திலும் பாதிப்பு ஏற்படாது என்றார் அவர்.

ஒவ்வொரு மரம் வெட்டப்படும் போது, 12 கன்றுகளை நடுவதற்கு மெட்ரோ ரயில் நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது. இரண்டாம் கட்ட மெட்ரோ திட்டத்தில் 2,000 மரங்கள் எடுக்கப்படவுள்ளன. மரக்கன்றுகள், செடிகள் நட்டு வளர்ப்பதற்காக ரூ.3.86 கோடி செலவிடப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.